**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, KODUMUDI.**
**Calendar Case No. 74/2025**
**Prosecution Witness**:3

| Name | ரஞ்சித்குமார் (PW3 ) | Taluk | |
|---|---|---|---|
| Father's Name | | Calling | |
| Village | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **03rd day of June 2026** by V.Nivedha Assistant, DM Cum JM Court, Kodumudi by following the direction of Officer of this Court.

*(Accused present.)*

**முதல் விசாரணை(அரசு தரப்பு):–**

நான் தற்போது கொடுமுடி காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 10.04.2025ம்தேதி காலை 07.00 மணிக்கு உதவி ஆய்வாளர் தமிழ்செல்வி அவர்களுடன் நானும், தலைமை காவலர் 2046 ரமேஷ் என்பவரும் வடக்கு புதுப்பாளையம் வாய்க்கால் கரையில் ரோந்து அலுவலலில் இருந்தபோது சந்தேகத்திற்கிடமான வகையில் நின்று கொண்டிருந்த ஒரு நபரை நான் தலைமை காவலர் ரமேஷ், சார்பு ஆய்வாளர் தமிழ்செல்வி ஆகியோர் பிடித்து விசாரித்தபோது அவர் தனது கையில் ஒரு பை வைத்திருந்தார், அந்த பையில் சீல் உடைக்காத நிலையில் அரசு மதுபானங்கள் சீல் உடைக்காத நிலையில் அரசு மதுபானங்கள் 180 ml கொள்ளளவு உடைய Black Pearl மதுபானத்துடன் கூடிய பாட்டில்கள் எண்ணிக்கை – 13, இருந்தது. மேற்படி மதுபானங்களை அரசு மதுபான கடையில் வாங்கி லாப நோக்கத்திற்காக அதிக விலைக்கு விற்பனை செய்யும் பொருட்டு வைத்திருப்பதாக கூறி குற்றத்தை ஒப்புக்கொண்டார். மேலும் அவர் தனது பெயர் பொன்னர்சங்கர் வயது 30, த/பெ.செல்வம், கிட்டக்காடு, திருவரங்குளம், புதுக்கோட்டை மாவட்டத்தை சேர்ந்தவர் என்றும் கூறினார். தற்போது நீதிமன்றத்தில் ஆஜராகி உள்ள எதிரி தான் அவர்.

2. சார்பு ஆய்வாளர் 08.00 மணிக்கு அவரை கைது செய்து பின்னார் 08.15 மணிக்கு அவர் வைத்திருந்த மதுபாட்டில்களை பொதுமக்கள் யாரும்முன்வராததால் போலீஸ் சாட்சிகளாகிய எங்கள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றினார். கைப்பற்றுதல் மகஜரில் நானும் தலைமை காவலர் 2046 ரமேஷ்ம்

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN
Date: 2026.06.03 15:57:48 +0530

சாட்சி கையொப்பம் செய்தோம். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். அந்த **கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** தற்போது வழக்கு விசாரணையின் பொருட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டுள்ள வழக்கு சொத்து எண்.49/2025ல் கண்டுள்ள மதுபாட்டில்களை தான் ஆஜர் எதிரி பொன்னர்சங்கரிடம் இருந்து கைப்பற்றப்பட்ட மதுபாட்டில்கள் ஆகும். எதிரி மற்றும் வழக்கு சொத்துக்களுடன் நிலையம் வந்து எதிரி மீது வழக்கு பதிவு செய்வதற்கு சார்பு ஆய்வாளருக்கு உதவியாக இருந்தேன். சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-**

அன்றைய தினம் காவல்நிலையத்தில் எத்தனை பேர் இருந்தோம் என்றால் 6 பேர் இருந்தோம். நான் அன்றைய தினம் எத்தனை மணிக்கு பணிக்கு வந்தேன் என்றால் காலை 07.30 மணிக்கு வந்தேன். ரமேஷ் அன்றைய தினம் எத்தனை மணிக்கு பணிக்கு வந்தார் என்றால் காலை 07.30 மணிக்கு வந்தார். நாங்கள் எந்த பணிக்கு சென்றாலும் நாட்குறிப்பில் பதிவு செய்துவிட்டு தான் செல்வோம் என்றால் சரிதான். அன்றைய தினம் நான், ரமேஷ், உதவி ஆய்வாளர் தமிழ்செல்வி ஆகியோர்கள் ரோந்து சென்றதை நாட்குறிப்பில் குறிப்பிட்டுவிட்டு தான் சென்றோம் என்றால் அது பற்றி உதவி ஆய்வாளருக்கு தான் தெரியும். அன்றைய தினம் வடக்குபுதுப்பாளையம் வாய்க்கால் கரைக்கு எவ்வாறு சென்றோம் என்றால் தனி தனி வண்டியில் சென்றோம். என்னுடைய பல்சர் வாகனத்திலும், ரமேஷ் Splender வாகனத்திலும், உதவி ஆய்வாளர் ஸ்கூட்டி வகை வண்டியிலும் சென்றோம். சம்பவ இடத்திற்கு எத்தனை மணிக்கு சென்றிருப்போம் என்றால் சுமார் 07.50 மணி அளவில் சென்றிருப்போம்.

2. நான் அங்கு சென்ற பின்பு தான் உதவி ஆய்வாளருக்கு தகவல் சொல்லி வரவழைத்தேன் என்றால் சரியல்ல, நாங்கள் மூவரும் ஒன்றாக தான் சென்றோம். எங்கெங்கு ரோந்து பணிக்கு சென்றோம் என்றால் கொடுமுடி டவுன் ஏரியாவை முடித்துவிட்டு, எல்லையூர் வழியாக வடக்கு புதுப்பாளையம் சென்றோம். டவுன் ஏரியாவை முடிப்பதற்கு எவ்வளவு நேரம் ஆனது என்றால் கால் மணிநேரம் ஆனது.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.06.03 15:57:52 +0530

வடக்கு புதுப்பாளையத்தில் எத்தனை வாய்க்கால் கரை உள்ளது என்ற விவரத்தை தெரிந்துகொண்டேனா என்றால் தெரிந்துகொண்டேன், காலிங்கராயன் வாய்க்கால் கரை இருந்தது. நான் விசாரணை அதிகாரியிடம் முதல் விசாரணையில் எந்த வாய்க்கால் கரை என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் வடக்கு புதுப்பாளையத்தில் உள்ள வாய்க்கால் கரை என்றுதான் சொல்லியுள்ளேன்.

3. வடக்கு புதுப்பாளையத்தில் பாருடன் கூடிய அரசு மதுபான கடை உள்ளது என்றால் சரிதான். மேற்படி மதுபானக்கடையில் நாங்கள் அன்றைய தினம் சோதனையிட்டோமா என்றால் ஞாபகம் இல்லை. சம்பவ இடத்தில் அன்றைய தினம் பொதுமக்கள் நடமாட்டம் இருந்ததா என்றால் இல்லை. எதிரி அரசுமதுபான கடையில் வேலை செய்கிறார், நான் புள்ளிவிவர கணக்கிற்காக அவர் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. அன்றைய தினம் நாங்கள் ரோந்துக்கு செல்லவில்லை என்றால் சரியல்ல. என்னிடம் காண்பிக்கப்படும் கைப்பற்றப்பட்ட மதுபாட்டில்களில் மதுபான அளவு மாறுபட்டுள்ளது என்றால் சரிதான். ஒவ்வொரு பாட்டில்களிலும் ஸ்டிக்கர் ஒரே இடத்தில் ஒட்டப்படவில்லை, மாறி மாறி உள்ளது என்றால் சரியல்ல. மேற்படி மதுபாட்டில்கள் திறந்த நிலையில் இல்லை, சீலுடன் தான் உள்ளது. எதிரி எனக்கு யார் என்றே தெரியாது என்றாலும், புள்ளிவிவரகணக்கிற்காக அவர் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. காவல்நிலையத்தில் உள்ள நாட்குறிப்பை நீதிமன்றத்தில் ஒப்படைக்க இயலுமா என்றால் உதவி ஆய்வாளர் தான் ஒப்படைப்பார். எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை**: இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

PANDIARAJAN

Digitally signed by PANDIARAJAN
Date: 2026.06.03 15:57:56 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், கொடுமுடி.